# வாக்கியம் அமைத்தல்

( ஏ, ஐ, ஒ, ஓ, ஒள சொற்கள் )

1. ஏணி

வருண் ஏணியில் ஏறினான்.

2. ஏர்

விவசாயி வயலில் ஏர் உழுதார்.

3. ஏற்றம்

பழங்காலத்தில் மக்கள் ஏற்றம் மூலம் கிணற்று நீரை எடுப்பர்.

4. ஏவுகனை

விண்வெளிக்கு ஏவுகனை வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

5. ஏலக்காய்

தேக்கடியில் ஏலக்காய் தோட்டத்தை சுற்றி பார்த்தோம்.

Notebook Writer

6. ஏமாற்றம்

மழை இல்லாமல் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

7. ஏழை

மன்னன் ஏழைகளுக்கு உதவி செய்தான்.

8. ஐவர்

பாண்டவர்கள் ஐவர்.

9. ஐயா

மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்.

10. ஒலி

கோவில் மணியின் ஒலி தெரு முழுவதும் கேட்கும்.

11. ஒளி

சூரிய ஒளி பிரகாசமாக இருக்கும்.

Notebook Writer

12. ஒற்றுமை

மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

13. ஒழுக்கம்

பள்ளியில் மாணவர்கள் ஒழுக்கத்துடன் நடப்பர்.

14. ஒட்டகம்

ஒட்டகம் பாலைவனத்தில் வாழும் விலங்கு.

15. ஓவியர்

படத்தை ஓவியர் தத்ரூபமாக வரைந்திருந்தார்.

16. ஓய்வு

தாத்தா சிறிது நேரம் ஓய்வு எடுத்தார்.

17. ஓலை

பனை ஓலை மூலம் கைவினை பொருட்கள் செய்யலாம்.

Notebook Writer

18. ஓநாய்

ஊருக்குள் ஓநாய் கூட்டம் வந்தது.

19. ஓசை

குயிலின் ஓசை மிகவும் இனிமையானது.

20. ஓடை

கோடையில் ஓடை வற்றியது.

21. ஔவையார்

ஆத்திச்சூடி எழுதியவர் ஔவையார்.

Notebook Writer